# திரையிசையில் ஏ.ஆர். ரகுமான்



1976ம் ஆண்டு வெளிவந்த ஒரு பாடல் இசைப்பிரியர்களை யார் இந்தப் பாடலுக்கு இசை அமைத்தவர் என்ற ஆச்சரியத்துடன் கேள்வி கேட்க வைத்தது. அந்தப்பாடல் மச்சானைப் பார்த்தீங்களா? படம் அன்னக்கிளி. அந்தப்பாடல் இளையராஜாவை அறிமுகப்படுத்தியது.

பதினாறு ஆண்டுகள் கழித்து "சின்னச் சின்ன ஆசை" பாடல்கள் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தது. அந்தப்பாடலில் மயங்காதவரே கிடையாது. ரோஜா படத்தில் இடம்பெற்ற அந்தப்பாடலின் புகழுடன் ஏ.ஆர். ரகுமான் தமிழ் திரையுலகில் பிரவேசித்தார்.

தமிழ் சினிமாவில் எத்தனையோ இசையமைப்பாளர்கள் இசையமைத்த பாடல்கள் காலத்துக்குகாலம் ஒலித்துக்கொண்டிருந்தது.

"கண்ணா கருமை நிறக்கண்ணா" என்ற பாடல் இப்பவும் பலர் நினைவை விட்டுப் போகவில்லை. ஆனால் பலருக்கு அந்தப்பாடலுக்கு இசையமைத்து யார் என்று தெரியாது. பாடல் நிலைத்த அளவுக்கு அந்தப்பாடலுக்கு இசையமைத்த சுதர்சன் பெயர் நினைவில் நிற்கவில்லை.

தமிழ் திரைப்பட இசையின் பிதாமகன் என்று அழைக்கப்படும் பாபநாசம் சிவன் தொடக்கம் ஜி.ராமநாதன், கே.வி.மகாதேவன், விஸ்வநாதன்- ராமமூர்த்தி, சங்கர் கணேஷ் போன்ற இசையமைப்பாளர்கள் தமிழ்த் திரையிசைக்கு கணிசமான பங்களிப்பு செய்தார்கள்.

இளையராஜா தமிழ் திரைப்படத்துறைக்கு வரமுன்பு தமிழிசை ரசிகர்களால் இந்திப்பாடலுக்கு பெரும் வரவேற்பிருந்தது இளையராஜாவின் இசை ஹிந்திப் பாடல்களுக்கு இருந்த பெரும் செல்வாக்கை சரியவைத்தது. ஏ.ஆர்.ரகுமான் இசையோ தமிழுக்கு இருந்த ஆங்கில இசை மோகத்தை துரத்தியது.

1992ம்ஆண்டு திரை இசைக்குள் புகுந்த ஏ.ஆர்.ரகுமான் புயல் வேகத்தில் இனிமையான பாடல்களை தந்தார். தமிழ் நாட்டில் தொடங்கிய இந்த இசைப்புயல் வடக்கே இந்தியிலும் வீசத்தொடங்கியது. இந்திப்பட இசைதான் உருமாறி பல தமிழுக்கு வந்த காலம் போய் பின்னர் இவரது பல பாடல்கள் ஹிந்தியில் கொடிகட்டி பறந்தன.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல் ஏ.ஆர்.ரகுமான் இந்திய தேசியகீதமான "வந்தே மாதரத்துக்கு" இசை வடிவம் கொடுத்தது இந்தியா முழுக்க இவருக்கு பெரும் பெயரை ஏற்படுத்தியது.

ஏ.ஆர்.ரகுமானுக்கு விருதுகளுக்கு குறைவில்லை. தேசிய மற்றும் மாநில விருதுகள் இவருக்கு நிறைய கிடைத்தன. இவருக்கு லண்டன் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தைக் கொடுத்தது.

கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் இவரது 'விடைகொடு எங்கள் நாடே' என்ற பாடல் உட்பட பல பாடல்கள் எங்கள் மண்ணின் வாசனையை எமக்கு உணர்த்தியது. இந்தப்படத்திற்கு இவருக்கு தேசிய விருதும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

சங்கமம் திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல்களில் நாட்டுப்புற இசையும் கர்நாடக இசையும் சங்கமிக்கிறது. அந்தப் படத்தில் இடம்பெற்ற "மார்கழித்திங்களல்லவா" என்ற பாடல் மனதில் ரீங்காரமிடுகிறது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த படகோட்டி படத்தில் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசையில் 'தொட்டால் பூ மலரும்' என்ற பாடல் இடம்பெற்றது. அந்தப்பாடலுக்கு ஏ.ஆர்.ரகுமான் இசை உருமாற்றினார். இந்தப் பாடல் நியூ படத்தில் இடம்பெற்றுள்ளது. அண்மையில் எதிர்பாராத விதமாக ஏ.ஆர்.ரகுமானை சந்தித்த விஸ்வநாதன் கட்டிப்பிடித்து 'உன் இசை அமர்க்களமடா' என்று பாராட்டினார்.

சில காலம் லண்டனில் தங்கி அங்கே ஆங்கில இசை நிகழ்ச்சிகள் நடத்தினார்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் இளம் சந்ததியினர் தமிழ் பாடல்களை விரும்பிக் கேட்பதற்கு ஏ.ஆர்.ரகுமானின் இசையே வித்திட்டது எனலாம்.

- நேயன் -

## வாத்தியார் மெல்பேண் வருகிறார்



ஈழத்து
பள்ளி வாழ்க்கைகளின்
நினைவுகளை மீடகும்
நாடகம் வாத்தியார்.

வாத்தியார் :- காந்தி மகின்ரயர்
மாணிக்கசிங்கம்

வாத்தியார் :- வெறும் பொழுது
போக்கிற்காக உருவாக்கப்பட்ட
கதாபாத்திரம் அல்ல

.......அன்னலட்சுமி ராஜதுரை
வீரகேசரி

இலங்கை, ஐரோப்பா,
சிட்னியில் பலதடவை
அரங்கேறிய வாத்தியார்
நாடகம் மெல்பேண்
வருகிறது.

# பரபரப்பாக இருக்கிறார் கமல்

'மும்பாய் எக்ஸ்பிரஸ்' படப்பிடிப்பில் ஏற்பட்ட எலும்பு முறிவு இன்னும் சரியாகவில்லை. கையில் கட்டுடன் டாக்டர் வேஷத்திற்கு தயாராகிவிட்டார். கன்னடத்தில் தயாராகிறது 'சதிலீலாவதி'. ரமேஷ் அரவிந் இயக்குனர் ஆகிறார். 'தேவர் மகன்' படமும் கன்னடத்தில் ரீமேக் செய்யப்படுகிறது. தெலுங்கில் ஒரு படமும் செய்யப்போகிறார்.

சமீபத்தில் கேரளாவில், 'டாக்டர் ஏ.டி..கோவூர் நேஷனல் அவார்ட் என்கிற விருதைப் பெற்றிருந்தார் கமல். அவரின் பகுத்தறிவு வாழ்க்கை முறைக்குக் கிடைத்திருக்கிற கௌரவம் இந்த விருது.

"நான் நிறைய விருதுகள் வாங்கிவிட்டேன். நான் வாங்கிய எல்லா விருதுகளையும் விட இது மேன்மையானது. ஏனெனில், மற்ற விருதுகள் என் திறமைக்காகத் தரப்பட்டவை. இந்த விருது என் வாழ்க்கைக்காக கிடைத்தது. பல போராட்டங்களைக் கடந்து பாரங்களை இறக்கி வைக்கக் கடவுளை எதிர்பாராமல் இருந்ததற்கும், நான் கண்ட உண்மையை நிரூபிக்க முப்பத்தைந்தாண்டுகள் வாழ்ந்ததுக்கும் கிடைத்த அங்கீகாரம் இது!" என்று பெருமிதத்துடன் பேசுகிறார் கமல்.

"திடீரென இந்தி, தெலுங்கு, கன்னடம் என பிற மொழிகளில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டீர்களே?"

"ஏற்கெனவே செய்த விஷயம்தான். நடுவில் கொஞ்சம் சுகவாசியாக இருந்து விட்டேன். எல்லா மொழி ரசிகர்களும் என்னை ஏற்றுக்கொள்வதை ஒரு பரிசாக உணராமல். தொந்தரவாக நினைத்தது தவறு என்று புரிந்தது. அந்தத் தவற்றை சரி செய்கிற முயற்சியில் இறங்கியிருக்கிறேன். தமிழை விட்டுப்போகவில்லை. 'பேரை மாத்து' ஸ்கிரீனைக் கிழிப்பேன்னு மிரட்டினாலும் இங்கே படம் பண்ணுவேன்!"

"ஏன், 'வேட்டையாடு விளையாடு' என்று நல்ல தமிழ் பெயருடன் அவசர அவசரமாகப் புதிய படம் தொடங்கினீர்கள்?"

"நான் தமிழில் பெயர் வைப்பதே செய்தியாகிறது என்பது எனக்கு சிரிப்பை வரவழைக்கிறது. தொடர்ந்து என்னை ஒரு தமிழ்த் துரோகியாகவே புரிந்து கொள்வது ஏனென்று புரியவில்லை. ஒருவேளை, தமிழனாகப் பிறந்து, நல்ல தமிழ் பேசி, தமிழிலேயே சிந்திப்பதால் என்னைத் தமிழ் விரோதியாக பார்க்கிறார்கள் போல! 'வந்தாரை வாழவைக்கும் தமிழ் நாடு'. ஆனால் வீட்டில் இருக்கிற சகோதரனைக் கண்டுக்க மாட்டாங்களோ, என்னவோ!"

"தொடர்ந்து அரசியல் சீண்டல்களுக்கு ஆளாகிறீர்களே?"

"காலெஜ் போற பொண்ணு மாதிரிதான்! காலேஜ் போயிட்டிருக்கிற வரைக்கும் சீண்டல்கள் இருந்திட்டுதான் இரக்கும். படிப்பு முடிஞ்சி, கல்யாணம் ஆகி குழந்தை குட்டியோட செட்டிலாகிட்டா, அப்புறம் யாரும் கண்டுக்க மாட்டாங்க. 'நான் மதத்திற்கு எதிரானவன்'னு என்னை மிரட்டினால், சந்தோசப்படுவேன். அது எனக்கு கௌரவம் கூட! ஆனால் தமிழை நேசிக்கிற ஒருவனை தமிழ் விரோதியாக சித்திரிக்கும் போது வருத்தமாக இருக்கிறது!"

"தனிப்பட்ட வாழ்க்கையிலும் நிறைய சோகங்களை சந்தித்திருக்கிறீர்களே?"

"சினிமா நட்சத்திரமாக இருக்கிற என்னை தெருவில் இழுத்துவிட்ட பிரச்சனைகளும் இருக்கின்றன. நானாக வெண்டுமென்றே இழுத்துப் போட்ட பிரச்சனைகளும் உண்டு. நான் வகுத்துக் கொண்ட குறிக்கோளுக்காக சந்தித்த பிரச்சனைகளும் அதிகம். 'நான் கமலஹாசன். இவர் சரிகா. இது எங்கள் குழந்தை என்று சொன்னால் 'ஹோ, மிசஸ் கமலஹாஸன். என்று ஓட்டல் ரெஜிஸ்தரில் பதிவு செய்ததை எதிர்த்து சண்டை



போட்டிருக்கிறேன். என் மகளைப் பள்ளியில் சேர்க்கும் போது 'ரிலிஜன்' என்ற பகுதியில் 'இந்து' என்று எழுதுவதை எதிர்த்து போராடி இருக்கிறேன். சாதி பெயரை போடமாட்டேன் என்று சொன்னதனாலேயே, பிறப்பு சான்றிதழ் தரமுடியாது என்று சொன்னார்கள். எந்தப்பள்ளி சாதி இல்லாமல் என் குழந்தையை சேர்த்துக்கொள்கிறதோ, அந்தப்பள்ளியில் அவள் படித்தால் போதும் என்று பிடிவாதமாக மறுத்திருக்கிறேன். இத்தகைய பிரச்சனைகளில் என் சக்தி நிறைய செலவழிந்திருக்கிறது. ஆனால், அந்தப் போராட்டத்தில் அர்த்தம் இருப்பதாக இப்போதும் எனக்கு திருப்தி இருக்கிறது. 'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்கிற சங்க இலக்கிய பாடல் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பவன் நான். 'தொட்ட பின்பே பாம்பு என்றும் சுட்ட பின்பே நெருப்பு என்றும் பட்டுப் பட்டே பழகி விட்டேன்' என்று கவிஞர் பாடினதுதான் என் வாழ்கை!"

'நடிகர் அரசியலுக்கு வருவதையும், சினிமாவில் அதைப் பிரச்சாரம் செய்வதையும்வரவேற்கிறீர்களா?'

"என்வீட்டுக்கு யாராவது வந்தால் நான் வரவேற்கலாம். அரசியல் என் வீடு அல்ல. அது வேறு யார் வீடோ! அங்கு போய் 'வாங்க வாங்க' என்று வரவேற்க நான் யார்? நாளைக்கு விஜயகாந் அரசியலில் இருந்தபடியே சினிமாவில் நடிக்க வந்தால், அதை நான் வரவேற்கலாம். ஏனெனில் சினிமா மட்டுமே என் வீடு!"

"தமிழ் சினிமா வளர்ச்சிப் பாதையில் செல்கிறதா? வாரிசு அரசியல் மாதிரி வாரிசு சினிமா வந்து விட்டதே?"

"தமிழ் சினிமா வர்த்தகப் பாதையில் நன்கு முன்னேறுகிறது. வர்த்தகம் மட்டுமே வளர்ச்சி அல்ல. காரணம், வர்த்தகர்கள் சினிமாவை கண்டுபிடிக்கவில்லை. விஞ்ஞானமும் கலையும் சேர்ந்து பெற்ற குழந்தை சினிமா. அதன் வளர்ச்சியே முழுமையான வளர்ச்சி. அப்புறம் வாரிசு அரசியல் அளவுக்கு வாரிசு சினிமா மோசமா என்று தெரியவில்லை. நானெல்லாம் கூட தகுதி இல்லாமல்தான் சினிமாவிற்குள் வந்தேன். வந்து என்னை தகுதிப் படுத்தி கொண்டேன் என்பது மட்டுமே உங்கள் கேள்விக்கு பதில் சொல்கிற எனது தகுதி. வருகிற இளைய தலைமுறை அதைப் புரிந்து கொள்ள வேண்டும்!"

"கௌதமிக்கும் உங்களுக்கும் இடையே இருப்பது வெறும் நட்பு மட்டும்தானா?

இல்லவே இல்லை. நட்பும் இருக்கிறது. ம்... குணா ஸ்ரைலில் சொல்வதென்றால் இது அதையும் தாண்டி புனிதமானது.!"

"ரஜினி மாமனார் ஆகிவிட்டார் உங்கள் வீட்டில எப்போ விசேஷம்?"

"அநேகமாக இந்த மாசமே இருக்கலாம்! என் மகள் ஸ்ருதி மேற்படிப்புக்காக வெளிநாடு போறாங்க. இந்தியா மாதிரி பெண்ணடிமை சமூகத்தில் ஒரு பெண்ணை வெளிநாடு அனுப்பி படிக்க வைப்பதுதான் நிஜமாகவே விசேஷம். மற்றபடி கல்யாணத்தைத்தான் விசேஷம்னு நினைச்சீங்கன்னா, அதை என் மகள்தான் தீர்மானிக்கனும். அவர் தன் விருப்பத்தை சொல்லும் போது, ஒரு தந்தையாக என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வேன். அவ்வளவுதான்!"

நன்றி: ஆனந்தவிகடன்